# பெண்பாற் புலவர் பாடல்களில் நெய்தல் தலைவியின் இருப்பு

முனைவர் கி. அய்யப்பன்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
உ. நா. அரசினர் கல்லூரி, பொன்னேரி- 601204
பேசி: 9962660279
மின்னஞ்சல்: agniiyyappan@gmail.com

**முன்னுரை**

தமிழக வரலாற்றின் எக்காலத்தைக் காட்டிலும் பெண் கவிதைமொழி தன் தனித்துவத்தோடு செழித்திருந்த காலமாக சங்க காலத்தைக் கூறுவர். சங்கக் கவிதையின் மொத்தப் பரப்பில் பெண் கவிதை ஒரு சிறிய இடத்தையே பெறுகிறது. சங்கக் கவிதைகள் எழுதப்பட்டதும் கோட்பாட்டு மயமாக்கப்பட்டதும் வெவ்வேறு கால கட்டமாக உள்ளது. இச்சூழலில் சங்கப்பெண் கவிதை சுதந்திரமாக இருந்தாலும் அது கோட்பாட்டு மயமாக்கப்பட்டபோது முழுவதிலும் ஆண் மையக் கட்டமைப்புக்குள் வருகிறது. ஐந்திணைக்குரிய உரிப்பொருள் அனைத்தும் ஆண் தன்னிலை சார்ந்த கட்டமைப்பாகவே உள்ளது. சங்கக் கவிதைகள் திணைக் கோட்பாடு என்னும் பெரும் சட்டகத்திற்குள் அமையப் பெற்றுள்ளன. அகம்- புறம் என்ற வாழ்வியலின் இரு எதிர் நிலைகளுக்கிடையில் திணைக் கோட்பாடு சமனிலைப் படுத்தப்பட்டுள்ளது. நிலத்திற்கும் மனிதப் பண்பாட்டிற்குமான உறவு நிலையிலிருந்து அது உருவாக்கப்பட்டுள்ளது.

சமூக வாழ்வின் அனைத்துச் செயல்பாடுகளையும் பாடுகிறவர்களாகப் பெண்கள் வெளிப்படவில்லை என்றாலும் வாழ்க்கையின் நிலையாமை, இயலாத் தன்மை முதலியவற்றை பெண்பாற் புலவர்கள் பாடுபொருளாகக் கொண்டுள்ளனர். பெண்ணியச் சிந்தனைகள் கருத்தியல் கூர்மை பெற்றுள்ள இன்றைய சூழலில் திணைக் கோட்பாடு ஓர் ஆண் மையக் கட்டமைப்பாகக் காணப்படுகிறது. திணைக் கோட்பாட்டில், அகத்தில் பெண்ணுடல் ஆணுக்கான துய்ப்பு நிலையாக நுகர் பொருளாக வடிவமைக்கப்பட்டுள்ளது. புறத்தில் பெண்ணுடல் என்பது நிலமாகப் பதிலீடுச் செய்யப்பட்டு போரின் வழியான கைப்பற்றலின் வழி ஆணின் அதிகாரத்திற்கும் ஆட்சிக்கும் உட்பட்டதாக நிலம் பொருளைக் கொள்கிறது. இந்த ஆண் மைய சட்டகத்திற்குள் நின்றே சங்கப் பெண் புலவர்கள் இயங்கினர் என்றாலும் சங்கப் பாடல்களின் பொது போக்கிற்குப் புறத்தாக நிற்கும் பால் அடையாளம் சார்ந்த நுட்பமான வேறுபாடுகளையும் தனித்துவங்களையும் கொண்டிருந்தனர். திணைக்கோட்பாடு தாண்டி சங்கப் பெண்கவிதை ஆராயப்பட வேண்டிய தேவைகளை இன்றைய பெண்ணிய விமர்சனங்கள் உருவாகியுள்ளன. விமர்சனங்களை முன்னிறுத்தி இக்கட்டுரையானது நெய்தல் திணை பாடிய பெண்பாற் புலவர்களின் பாடல்களில் பொதிந்துள்ள அக உணர்வான காதலையும், தலைவியானவள் பொருள் தேடச்சென்ற தலைவனுக்காகக் காத்திருக்கும் நிலையினையும் ஆராய்ந்து விளக்குவதாக அமைகிறது.

**திணை விளக்கம்**

தமிழ் மரபில் "திணை என்பது நிலத்தை மட்டும் குறிக்கவில்லை. அந்த நிலங்களில் வாழும் மக்கள் பற்றியும் அவர்களின் ஒழுகலாறு பற்றியும் கூறுகிறது. அதாவது ஒரு திணையிலுள்ள மக்கள் இப்படித்தான் வாழ்ந்தார்கள் என்று அல்லாமல் இந்தத் திணையில் இப்படி மக்கள் ஒழுகுகின்றார் என்று கூறுவது".(தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் நெய்தல் நில வாழ்வியல், ப. 212) என்று இரா. சீனிவாசன் கூறுகிறார். இதன் அடிப்படையில் நெய்தல் திணைச் சார்ந்த பெண்பாற் புலவர்களின் பாடல்கள் இக்கட்டுரையின் எல்லையாக அமைகிறது.

**சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்கள்**

சங்க இலக்கியம் என்று அறிஞர்களால் தொகுக்கப்பட்ட நூல்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். இவற்றுள் எட்டுத்தொகைத் தொகுப்பில் உள்ள அகநானூறு, ஐங்குறு நூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை ஆகிய ஐந்து நூல்களும் அகத்திணை நூல்கள். பத்துப்பாட்டுத் தொகுப்பிலுள்ள குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு ஆகிய இரண்டு நூல்களும் அகத்திணை நூல்கள். இத் தொகுப்பில் உள்ள நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய இரு நூல்களையும்கூட அகத்திணை நூல்கள் என்று அறிஞர்கள் சிலர் எடுத்துக்கொள்கின்றனர். இவற்றில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் பெண்பாற் புலவர்கள் நெய்தல் திணையைப் பாடிய பதிவுகள் காணப்படுகின்றன.

"இன்று நமக்குக் கிடைத்துள்ள சங்கப்பாடல்களைப் பாடிய கவிஞர்களின் எண்ணிக்கை 473 ஆகும். சில பாடல்களைப் பாடிய கவிஞர்களின் பெயரினை அறிய இயலவில்லை. இத்தகைய கவிஞர்களில், பெண்களின் எண்ணிக்கை 41. பெண் கவிஞர்களின் எண்ணிக்கை குறித்துத் தமிழறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளன. பெண் கவிஞர்களின் எண்ணிக்கையினை உ.வே.சா. 38 எனவும், எஸ். வையாபுரிப்பிள்ளை 30 எனவும், ஔவை துரைசாமி பிள்ளை 34 எனவும், புலவர் கா. கோவிந்தன் 27 எனவும், ஔவை நடராசன் 41 எனவும், ந. சஞ்சீவி 25 எனவும், முனைவர் தாயம்மாள் அறவாணன் 45 எனவும் குறிப்பிடுகின்றனர்". (சங்கப்பெண் கவிஞர்களின் கவிதைகள், ப.2) என்று ந. முருகேசபாண்டியன் ஆய்வார்களின் பார்வையில் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை வேறுபடுவதை எடுத்துக் காட்டியுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

**நெய்தல் பாடிய பெண்பாற் புலவர்கள்**

பெண்பாற் புலவர்கள், தனித்துவம்மிக்க பெண்மொழியில் கவிதைகள் படைத்தனர் என்பது புலனாகிறது. நற்றிணையில் ஔவையார்(187, 295), நக்கண்ணையார்(19, 87), மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்(369), வெள்ளி வீதியார்(335, 348) ஆகியோர் பாடிய ஏழு பாடல்களும், **குறுந்தொகையில்** ஔவையார்(102, 200), கச்சிப்பேட்டு நன்னாகையார்(118, 172, 197, 325), வெண்மணிப்பூதியார்(297), வெள்ளி வீதியார்(386) ஆகியோர் பாடிய 8 பாடல்களும், **அகநானூற்றில்** குமுழிஞாழலார் நப்பசலையார்(160), போந்தை பசலையார்(110) ஆகிய இரண்டு பாடல்கள் என மொத்தம் 17 பாடல்கள் நெய்தல் திணை குறித்து பெண்பாற் புலவர்கள் பாடிய பாடலாக அறியப்படுகிறது.

இப்பாடல்களில் தலைவி கூற்றாக அமைந்த பாடல்களாக, நற்றிணையில் 87, 69, 335, 348, 187-ம் குறுந்தொகையில் 102, 200, 118, 172, 197, 325, 299, 380- **ம் ஆக** 13

பாடல்கள் அமைந்துள்ளன. நற்றிணையில் 19, 295 அகநானூற்றில் 110, 160 ஆகிய நான்கு பாடல்கள் தோழியின் கூற்றாகவும் அமைகிறது.

வெண்பூதியார், இவர் குறுந்தொகையில் மூன்று பாடல்கள் (97, 174, 219) இயற்றியுள்ளார். "வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார் என்பாரும் இவரும் ஒருவரே. பெயர் அளவில் பெண்பாலாக இருக்கலாம் என்று தோன்றினாலும் வெள்ளூர் கிழார் மகனார் என்று இருப்பதால் ஆண்பால் என்றே கொள்ள வேண்டும்."(ப.147) என்று உ. வே. சாமிநாத ஐயர் குறுந்தொகை பதிப்புரையில் கூறுகிறார். இந்த பின்புலத்தில் வெண்பூதியார் என்ற பெயரைப் பெண்பாற் புலவராக எடுத்துக்கொள்ளவில்லை.

நெய்தல் பாடிய பெண் புலவர்களில் பெண்ணின் உடல் எழுச்சியை இயற்கையோடு நெருங்கிய உறவு கொள்வதாக பாடல் யாத்துள்ளனர். இப்பாடல்களில் அனைத்து மனக்கோலங்களும், உடலின் உரையாடலும் இயற்கையின் பல்வேறு சலனங்கள் வழியாகவே குறிப்புணர்த்தப்படுகின்றன. இயற்கையுடனான உறவு என்பது ஒரு வாழ்வியல் பொருளாகவும் சங்க இலக்கியங்களில் ஓர் அறிதல் வழி முறையாகவும் இருந்துள்ளது. நெய்தல் பெண் புலவர்களிடம் இது முதன்மை பெறுகிறது. இதன் தொடர்பில் அனைத்துப் பாடல்களிலும் உணர்ச்சிகள் நெய்தலின் சூழலுடனேயே தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

**இற்செறித்தலுக்கு எதிரான கலகக்குரல்**

நற்றினையில் நெய்தல் திணைப் பாடலில் ஔவையார் இற்செறித்தலுக்கு எதிரான கலகக்குரலை பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது.

திருமண வயதிலிருந்த தம் மகளின் களவொழுக்கத்தை அறிந்த தாய், அவளை இற்செறிக்கிறாள். மலைப் பகுதியில் சூரியனின் வெம்மை தாங்கமுடியாமல் கருகிக் கிடந்த வள்ளிக் கொடியைப் போல அவளது உடலழகு அழிந்தது கண்டு தோழியர் கூட்டமும் வருந்தியது.

"பல வேலைப்பாடுகள் மிக்க கப்பல்களைப் பெரிய விளங்கிக் காணும் பெரிய துறையில் வைக்கப்பட்டிருக்கும் செருக்கைத்தரும் மதுச்சாடியைப் போன்ற என் இளைய அழகு வீட்டு வாயிலிலேயே அழிந்தொழியும். யாம் இவ்வீட்டிற்குள்ளிருந்தே முதுமையடைந்து மடிவோம்" என்று நற்றிணை (295) நெய்தல் திணைப்பாடலில் ஔவையாரின் அழகுத் தலைவி இற்செறிப்புக்கு எதிரான கலகக் குரல் எழுப்புகிறார்.

"முரிந்த சிலம்பின் நெரிந்த வள்ளியின்
புறம் அழிந்து ....................
இளநலம் இற்கடை ஒழியச்
சேறும், வாழியோ! முதிர்கம் யாமே" (நற்றிணை- 295)

இந்தப் பாடலில் "மயக்கம் தரும் மதுச்சாடியைத் தூக்கி அருந்தாவிட்டால் நாட்பட்டு மதுவீணாகி விடும். இற்செறித்தால் இளமை கெட்டு முதுமையடைந்து வீட்டிற்குள்ளே இறந்துபோக நேரிடும்" என்று இற்செறிப்புக்கு எதிரான கலகக் குரலை ஔவையார் எழுப்புகிறார்.

**தலைவி வீட்டோடும் தலைவன் தேரோடும்**

ஔவையின் நற்றிணை 187- ஆவது பாடலில், நெய்தல் கூம்பி விட்டது. ஞாயிறு மேற்கில் செல்ல நிழல் கிழக்கே சென்றது. மலர்களுடைய நெய்தற்சோலை

ஒளி இழந்தது என நெய்தலின் ஒரு மாலைக் காட்சியை மிகுந்த அழகியலோடு பாடும் தலைவி குதிரைகள் பூட்டி பல மணிகள் ஓசையெழுப்பத் தலைவனின் தேரும் விடைபெற்றது என்கிறாள்.

"நெய்தல் கூம்ப நிழல் குணக்கு ஒழுக
கல் சேர் மண்டிலம் சிவந்து நிலம் தணிய
பல் பூங் கானலும் அல்கின்று அன்றே
இன மணி ஒலிப்ப பொழுது படப் பூட்டி
மெய்ம் மலி காமத்து யாம் தொழுது ஒழிய
தேரும் செல் புறம் மறையும் ஊரொடு" (நற்றிணை- 187)

இதனைப் போன்றே கச்சிப்பேட்டு நன்னாகையார் பாடலில் தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்திருக்கிறான். திருமணத்திற்குக் காலம் நீடித்துகொண்டே வருகிறான் தலைவன். வருவான் என்று ஒவ்வொரு நாளும் தலைவி எதிர்பார்க்கிறாள். மாலைப்பொழுது வந்தது. தலைவன் வராததால் ஏமாற்றத்தோடு இருந்த தலைவி, தன் வருத்தத்தைத் தோழியிடம் கூறுகிறாள்.

"புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நாரில் மாலைப்
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ எனவும்
வாரார் தோழிநங் காத லோரே" (குறுந்தொகை118)

என்ற பாடலில் தோழி! பறவைகளும் விலங்குகளும், தனிமையில் தங்க, "நள்" என்னும் ஓசையுடன் வந்த அன்பில்லாத மாலைக் காலத்தில், பலரும் புகுதற்குரிய வீட்டு வாயிலை அடைக்க எண்ணி, "யாராவது உள்ளே வருவதற்கு இருக்கின்றீர்களோ" என்று வினாவுவார் கேட்கவும், நம் தலைவர் வாரார் ஆயினர் என்று கூறுகிறாள்.

"தலைவி வீட்டோடும் தலைவன் தேரோடும்
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ எனவும்
வாரார் தோழிநங் காத லோரே." (குறுந்தொகை 118)

எனும் பாடல் வரிகளில் கச்சிப்பேட்டு நன்னாகையார் தலைவியின் இருப்பு வீட்டை நோக்கியது எனக் காட்டுகிறது. நெய்தல் பாடல்களில் தலைவன் என்னும் நபர் ஓர் இயங்கு நிலையாகவும், பயணத்திற்குரியதாகவும் இருக்கிறார்.

"கார்காலம் கழிந்து குளிர்காலம் வந்துவிட்டது என்பது தலைவருக்கும் தெரியும். ஆகவே, விரைவில் வருவார். நீ வருந்தாதே" என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். "தலைவர் வருவதாகச் சொல்லிச் சென்ற கார்காலம் கழிந்தது. ஆனால், அவர் இன்னும் வரவில்லை. வாடைக் காற்றோடு கூடிய குளிர்காலமும் வந்துவிட்டது இனி, நான் என்ன செய்வேன்?" என்று தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி தோழியிடம் தன் வருத்தத்தைத் தெரிவிக்கிறாள்.

குமுழிஞாழலார் நப்பசலையார் பாடலிலும் தலைவனது வருகையை முன்னறிவிப்பதும் தலைவியின் நம்பிக்கையின் பற்றுதலுக்கும் அடிப்படை ஒலியாகத் தேரின் ஒலியே இருப்பதைப் பாடல் வழி அறிய முடிகிறது.

"பாம்பு உயர் தலையின், சாம்புவன நிவப்ப,
இர வந்தன்றால் திண் தேர்; கரவாது
ஒல்லென ஒலிக்கும் இளையரொடு வல் வாய்
அரவச் சீறூர் காண,
பகல் வந்தன்றால், பாய்பரி சிறந்தே" (அகநானூறு160)

என்ற பாடலில் நப்பசலையார் இரவில் வந்து சென்ற தலைவனின் தேர் இன்று பகலிலேயே ஊர் மகளிரோடு அரவம் எழுப்பியபடி வருகிறது என்று கூறுகிறது. இப்படி நெய்தல் பாடல்கள் பலவற்றில் தலைவன் விடைபெற்றுச் செல்லும் தேரின் காட்சி வருவதைக் காணமுடிகிறது.

**இயற்கையும் பெண்ணுடலும்**

நற்றிணையில் நக்கண்ணையார் தலைவி தலைவன் பிரிந்தபோது அவனைக் கனவில் கண்டு மகிழ்ந்து பாடியதாக அமைகின்றது. மாமரத்தில் ஒரு வௌவால் தூங்குகின்றது. அதன் கனவில் சோழர் குடி பிறந்த அழிசி என்பவனுக்கு உரிமையான காட்டில் உள்ள நெல்லிக்கனியும் அதன் சுவையும் இடம்பெறுகின்றது. இதனைக் கண்ட வௌவால் மகிழ்வது போல நானும் தலைவனைக் கனவில் கண்டு மகிழ்கின்றேன் என்பது பாடல் 87-இன் பொருளாகும்.

இப்பாடலில் தலைவனின் நெருக்கம் நிறைவேறாததைப் பாடப்பெற்றுள்ளது. மேலும் இவரின் உவமை புலவர் பிறரின் உவமைகளை விட மாறானது. வௌவால் உவமை என்பது வேறுபட்ட வித்தியாசமான உவமை. பெண்கள் நுணுக்கமாகவும், தங்களுக்கு அருகில் இருப்பதையும் உவமையாக ஆக்கும் படைப்பு இப் பாடலில் இருப்பது தெரியவருகிறது.

இதனோடு தொடர்புடைய கச்சிப்பேட்டு நன்னாகையார் குறுந்தொகை 172 ஆவது பாடலில் தலைவியின் தனிமையையும், மாலையில் வௌவாலானது தன் வேட்கை நீங்க பழம் கொண்ட மரத்தை நாடிப் பறப்பதையும் ஒரு நேர்கோட்டில் வைக்கிறார்.

"தாஅவல் அஞ்சிறை நொப்பறை வாவல்
பழுமரம் படரும் பையுள் மாலை" (குறுந்தொகை 172)

என்ற குறுந்தொகை பாடலில் நிறை சூல் கொண்ட பெண் ஆமை அடும்புக் கொடிகளைச் சிதைத்தபடி நகர்ந்து சென்று வெண்மையான மணல் மேட்டில் அவற்றை ஒதுக்கியபடி மறைவிடத்தில் யானைத் தந்தத்தினால் செய்த வட்டு போன்ற வடிவுடைய புலால் வீச்சம் கொண்ட தன் முட்டைகளை இடுகிறது. முட்டை பொரிந்து குஞ்சுகள் வெளிப்படுவதுவரை அவற்றை அருகிலிருந்து பிளந்த வாயுடைய ஆண் ஆமை காவல் செய்கிறது. இத்தகைய நிலத்தை சேர்ந்தவனாகத் தலைவன் இருக்கிறான். மேலும்,

குமுழிஞாழலார் நப்பசலையாரின் அகநானூறு 160ஆவது பாடலில்,

"கோட்டு வட்டு உருவின் புலவு நாறு முட்டை
பார்ப்பு இடன் ஆகும் அளவை பகுவாய்க்
கணவன் ஓம்பும் கானல் அம் சேர்ப்பன்" ( அகநானூறு 160)

இப்பாடல் ஒரு சிற்றுயிரியின் அன்புமிக்க அகவாழ்வை நுணுக்கமாகச் சொல்வதோடு அதனை அகப்பொருளோடு இணைத்து மனிதனாக்குகிறது. பெண் கவிதைகளில்

இத்தகைய நுண்விவரணைகள் பல விரவி வருகின்றன. இப்பாடல்களில் அறிவியல் பதிவுகள் அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

**தலைவனின் பிரிவை தாங்கிக்கொள்ள முடியாத தலைவி**

தலைவியைக் கூடி நீங்கிய தலைவனைப் பார்த்து விரைவில் மணம்செய்து கொள் என்று தோழி சொல்லியதாக நற்றிணையின் 19- ஆம் பாடல் அமைகின்றது. சுறாமீனின் முன்பகுதி கொம்பு போல இலைகளைக் கொண்டதாகத் தாழையைக் கூறுகிறார். தாழையின் அரும்பு யானையின் தந்தம் போல வெளிப்படுகிறது. அப்படிப்பட்ட தாழை மலர்ந்து மணம் வீசி அப்பகுதியைத் திருவிழாக் காணும் ஊர் போல் மணமூட்டுகின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த ஊரின் தலைவன். தலைவியை விட்டுப் போகிறான். ஆனால் தலைவி இந்தப்பிரிவைத் தாங்கிக்கொண்டு உயிருடன் இருக்கமாட்டாள் என்று இப்பாடல் பதிவு செய்கிறது.

இந்தப் பாடலிலும் தலைவியின் துயரத்தைப் பெரிதுபட பேசுகிறார். தாழைப் புதரை உவமைக் காட்டியுள்ளது பொருத்தமாக அமைகிறது.

மேலும், காம உறவு வெளிப்பட்ட பின், திருமணம் செய்துகொள்ளாமல், பொருளீட்டச் சென்றுள்ள காதலன் பிரிவைத் தாங்கிக்கொள் என்று வற்புறுத்தும் தோழிக்குத் தலைவி சொல்வதாக அமையும் மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையாரின் இந்தப்பாட்டில்,

"சுடர் சினம் தணிந்து குன்றம் சேர,

………………………………………………

இன்றும் வருவது ஆயின், நன்றும்
அறியேன் வாழி தோழி! …………
சிறை அடு கடும் புனல் அன்ன, என்
நிறை அடு காமம் நீந்துமாறே" (நற்றிணை- 369)

வெயிலின் சினம் தணிந்து ஞாயிறு மலைக்குப் பின் இறங்குகிறது. நிறைந்த இறகுகளை உடைய குருகுப் பறவைகள் தம் இருப்பிடம் நோக்கி வானத்தில் பறக்கின்றன. பகல் பொழுதை நான் ஒருவாறு கழித்துவிட்டேன். முல்லை மலர் பூக்கும் மாலைப்பொழுது வந்துவிட்டது. அது என்னைப் பெரிதும் அற்பமாக்கும் மாலை. அவர் வராமலேயே அந்த மாலைப் பொழுது இன்றும் வருமாயின், ஞெமை மரம் ஓங்கி நிற்கும் இமய மலையின் உச்சியிலிருந்து வானத்து அருவி இறங்கிக் கங்கை ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுவது போல என் காமம் என் நிறைவுடைமையை அடித்துக்கொண்டு ஓடும், அந்தக் காமக் கங்கையில் நீந்திக் கரையேறுவது எப்படி? என்று தலைவி கேட்கிறாள்.

ஔவையார் குறுந்தொகையில் "தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று நீண்ட காலம் ஆகிவிட்டதே. தலைவி என்ன பாடுபடுவாளோ!" என்று தோழி கவலைப்படுகிறாள். தோழி கவலைப்படுவதை அறிந்த தலைவி, "அவரை நினைத்து நினைத்து நான் காமநோயால் வருந்துகிறேன், அவர் இன்னும் வரவில்லையே ! இந்தப் பிரிவை நான் எப்படிப் பொறுத்துக்கொள்ளப் போகிறேன் என்று தெரியவில்லையே!"என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். இதனை,

"உள்ளின் உள்ளம் வேமே உள்ளா
திருப்பினெம் அளவைத் தன்றே வருத்தி

வான்றோய் வற்றே காமம்

சான்றோர் அல்லர்யாம் மரீ இ யோரே” (குறுந்தொகை 102)

என்ற பாடலில் தலைவரை நினைத்தால் என் உள்ளம் வேகும். நினையாமல் இருக்கலாம் என்றால், அவ்வாறு இருத்தல் எனது ஆற்றல் என் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது அன்று. வானத்தைத் தொடுவது போன்று மிகப் பெரிதாக என்னைக் காமநோய் வருத்துகிறது. என்னால் தழுவப்பட்ட என் தலைவர் சான்றோர் அல்லர் என்று கூறுகிறாள்.

மற்றொரு பாடலில் கார்காலத்திற்கு முன்னரே திரும்பி வருவதாகத் தலைவன் கூறிச் சென்றான். கார்காலம் வந்துவிட்டது. ஆனால் தலைவன் இன்னும் வரவில்லை. அதனால், தலைவி வருத்தம் அடைந்தாள். “கார்காலம் வந்தும் தலைவர் இன்னும் வரவில்லையே” என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். அதற்குத் தோழி, “இன்னும் கார்காலம் வரவில்லை. நீ கார்காலம் வருவதற்கு முன் தலைவர் வந்துவிடுவார்” என்று தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். அதற்கு மறுமொழியாகத் தலைவி கார்காலம் வந்ததற்கான அறிகுறிகளைச் சுட்டிக்காட்டித் தலைவன் தன்னை மறந்துவிட்டதாகத் தோழியிடம் கூறுகிறாள். இதனை,

“பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்

மீமிசைச் தாஅய வீஇ சுமந்துவந்து

இழிதரும் புனலும் வாரார் தோழி” (குறுந்தொகை 200)

என்ற பாடலில் தோழி! கார்காலத்தில், பெய்வதற்காக மழையோடு மாலைக்காலத்தில் வரும் கரிய மேகங்கள், உழவர்களுக்கு இன்னிசை போல் இடி இடித்து முழங்குகின்றன. முன்பு மழை பெய்த குன்றத்தின் உச்சியிலிருந்து மலர்கள் மணக்கும் குளிர்ந்த கலங்கல் நீர் அங்கே பரவிக் கிடக்கும் மலர்களைச் சுமந்து கொண்டு அருவியாக வந்து விழுகின்றது. கார்காலத்திற்கு முன்னரே வருவதாக, நமக்கு ஆதரவாக, உறுதி கூறிச் சென்ற தலைவர் இன்னும் வரவில்லை. அவர் நிச்சயமாக நம்மை மறந்துவிட்டார். ஆனால், நாம் அவரை மறக்க மாட்டோம்! என்றுரைக்கிறாள். இதனோடு தொடர்புடைய,

“யாதுசெய் வாம்கொல் தோழி நோதக

நீர்எதிர் கருவிய கார்எதிர் கிளைமழை

ஊதையம் குளிரொடு பேதுற்று மயங்கிய

கூதிர் உருவின் கூற்றம்

காதலர்ப் பிரிந்த என்குறித்து வருமே.” (குறுந்தொகை197)

என்ற பாடலில் தோழி! கடல் நீரை ஏற்றுக் கொண்ட மேகம், மின்னல் இடி ஆகியவற்றோடு கூடிப் பல இடங்களில் தோன்றும் மழையுடன், ஊதைக் காற்றின் குளிர்ச்சியோடு மிகவும் மயங்கிக் கலந்து, கூதிர்க் காலமாகிய உருவத்தையுடைய கூற்றம், தலைவரைப் பிரிந்திருக்கும் என்னைக் குறி வைத்துக் கொல்வதற்காகத் துன்பம் உண்டாகுமாறு வருகின்றது என்றும் நாம் என்ன செய்வோம் என்றும் தலைவி கூறி வருந்துகிறாள்.

மற்றொரு பாடலில் தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து சென்றதை அறிந்த தோழி, தலைவிக்கு ஆறுதல் கூறுவதற்காக வந்தாள். “தான் பிரிந்து செல்லப் போவதாகத் தலைவன் பலகாலம் சொல்லிக்கொண்டிருந்தான். ஒருநாள் அவன்

அவ்வாறு என்னிடம் சொன்ன பொழுது, அவன் மீண்டும் பொய் சொல்லுவதாக நினைத்து, என் பக்கத்தில் நில்லாமல் போ என்று சொன்னேன். அவன் உண்மையாகவே என்னைப் பிரிந்து சென்றுவிட்டான். எனக்கு ஆதரவாக இருந்த அவன் இப்பொழுது எங்கே இருக்கின்றானோ?" என்று தலைவி வருத்தத்தோடு தோழியிடம் கூறுகிறாள். இதனை,

"சேறுஞ் சேறு மென்றலின் பண்டைத்தன்
மாயச் செலவாச் செத்து மருங்கற்று
மன்னிக் கழிகென் றேனே அன்னோ
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குளம் ஆயிற்றென் இடைமுலை நிறைந்தே." (குறுந்தொகை 325)

என்ற பாடலில் "உன்னைப் பிரிந்து செல்லப் போகிறேன்; உன்னைப் பிரிந்து செல்லப் போகிறேன்." என்று தலைவன் பலகாலமாகச் சொல்லிக்கொண்டிருந்தான். ஒருநாள் அவன் அவ்வாறு சொல்லும் பொழுது, அவன் முன்பு போலப் பொய் சொல்லுகிறான் என்று எண்ணி, "என் பக்கத்திலிருந்து ஒரேயடியாக நிலைபெற்று நீங்குக." என்றேன். அவனும் சென்றுவிட்டான். ஐயோ! நமக்குப் பற்றுக்கோடாகிய தலைவன் இப்பொழுது எங்கே இருக்கின்றானோ! அவனது பிரிவால் அழுத என் கண்ணீரால் என் முலைகளின் இடையிலுள்ள இடம் நிறைந்து, கரிய காலையுடைய வெண்ணிறமான நாரை, உணவை உண்ணும் பெரியகுளம் போல ஆயிற்று என்று தலைவி ஆற்றாமையை உரைக்கிறாள்.

இதனைப் போன்று வெள்ளி வீதியார் பாடலில் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றிருக்கிறான். தலைவனின் பிரிவால், தலைவி வருந்துகிறாள். "முன்பெல்லாம் நீ மாலைக்காலத்தில் இவ்வாறு வருந்தாமல் மகிழ்ச்சியோடு இருந்தாயே! இப்பொழுது என்ன ஆயிற்று? தலைவன் விரைவில் வந்துவிடுவான். நீ இவ்வாறு வருந்துவது சரியன்று" என்று தோழி கூறுகிறாள். தோழியின் கூற்றுக்கு மறுமொழியாகத் தலைவி, "மாலைக்காலம் இத்துணைத் துன்பத்தையும் தனிமையையும் தரும் என்பதைத் தலைவன் பிரிவதற்குமுன் நான் அறிந்திலேன்." என்று கூறு வருந்துகிறாள். இதனோடு தொடர்புடைய,

"வெண்மணல் விரிந்த வீததை கானல்
தண்ணந் துறைவன் தணவா ஊங்கே
வாலிழை மகளிர் விழவணிக் கூட்டும்
மாலையோ அறிவேன் மன்னே மாலை
நிலம்பரந் தன்ன புன்கணொடு
புலம்புடைத் தாகுதல் அறியேன் யானே." (குறுந்தொகை 386)

இப்பாடலில் தோழி! வெண்மையான மணல் பரவிய, மலர்கள் செறிந்த சோலையையுடைய, குளிர்ந்த கடல் துறையையுடைய தலைவன், என்னைப் பிரிவதற்கு முன்பு, நான், தூய அணிகலன்களை அணிந்த மகளிர், விழவுக்குரிய அலங்காரங்களைச் செய்துகொள்கின்ற மாலைக்காலத்தையே அறிந்திருந்தேன். இப்பொழுது, அது கழிந்தது! அம்மாலைக் காலம், நிலவுலகம் முழுதும் பரவியது

போன்ற பெரியதுன்பத்தோடு, வருத்தத்தைத் தரும் தனிமையை உடையது என்பதை நான் அப்பொழுது அறியேன் என்று தலைவி தனது துன்பத்தைக் கூறுகிறாள்.

இதே பொருண்மையில் போந்தை பசலையார் பாடல். பெண்மை உயரிய ஆளுமையின் அடையாளம். நுட்பமான அறிவுணர்வின் அடையாளம், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே படைப்பாற்றல் மிக்கவர்களாகத் திகழ்ந்த பாலினம், தனித்துவம் மிக்கவர்களாகத் தன்னுணர்வினை அழகாகத் திறத்தோடு வெளிப்படுத்திய இனம். சங்க இலக்கியப் பெண்பாற்புலவர்கள் மொழியைக் கூரிய ஆயுதமாகப் பயன்படுத்தித் தம்மை இயல்பாக வெளிப்படுத்தினர். தலைவன் தலைவி உறவு பற்றித் தோழி செவிலித்தாய்க்குச் சொல்வதாக அமையும் பாடலிலும்,

"அன்னை அறியினும் அறிக; அலர்வாய்
அம் மென் சேரி கேட்பினும் கேட்க;
பிறிது ஒன்று இன்மை அறியக் கூறி,
நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு, ''நன்னுதால்! (அகநானூறு110)

என்ற பாடலில் பெண்டிர் பலருள்ளே அவன் இவளை மட்டும் பார்த்து, "முகவெட்டுக்காரியே நான் போகட்டுமா" என்று வருத்தத்தோடு கூறினான். இவள் "போங்கள்" என்கிறாள். அவனோ அவன் வந்த தேரின் இருக்கையைப் பிடித்துக்கொண்டு நின்றதை தோழி செவிலித்தாய்க்கு கூறியதும், "அவன்தான் என் மகளுக்கு உரியவன் போலும்" என்று செவிலித்தாய் கூறுவதாக உள்ளது.

**இயற்கையுடன் காமத்தை ஒப்பிடல்**

நற்றினையில் நெய்தல் திணை பாடிய பெண்பாற் புலவர்களில் வெள்ளிவீதியாரும் ஒருவர். இவர் இயற்கையுடன் காமத்தை ஒப்பிட்டு பாடியுள்ளார். காமம் பெரிதாக வளர்கிறது. ஆனால் களையக் கூடியவர்தான் இல்லை. என,

"காமமோபெரிதேகளைஞரோஇலரே" (நற்றிணை- 335)

என்பதை இறுதியடியாய் அமைத்துக் கொண்ட வெள்ளிவீதியாரின் பாடலில் தலைவியின் தனிமை நெய்தலின் சூழலியலோடு உள்ளார்ந்த உறவுகளைக் கொண்டு வெளிப்படுகிறது. நிலவு கடலலைகளின் பின்னணியில் வானில் எரிகிறது. அலைகள் ஒலியெழுப்புகின்றன. அவை அமைதியின்மையின் குறியீடாகின்றன. கரைச் சோலையில் கூம்பிய வடிவு கொண்ட தாழை அகப்பை சோற்றுக் கவளத்தைச் சொரிவதைப் போலத் தழைந்து ஆடி காற்றின் வெளியெங்கும் மணத்தை அலைக் கழிக்கிறது. இரவுக் காற்றில் ஊடுருவும் தாழையின் வாசம் இயற்கையின் காமத்தைச் சொல்கிறது. கரிய பனையின் மறைவில் அன்றில் பறவை தனிமையில் தேம்பும் ஒலி மொத்த சூழலையும் அதிர்விக்கிறது. முடிவுறாத இரவின் ஊடாக எழும்பும் யாழின் இசையில் காமம் பெரிதாகிறது அதைக் களைபவர் இல்லாமலே என்பதாகக் காமமோ பெரிதே கலைஞரோ இலரே எனப் பாடல் முடிகிறது. இங்கு நெய்தலின் திணைச் சூழலுடனே உணர்வுகள் கடத்தப்பட்டுள்ளன என்பதைக் காணமுடிகிறது. மேலும்,

"நிலவே, நீல் நிற விசும்பில் பல் கதிர் பரப்பி,
பால் மலி கடலின், பரந்து பட்டன்றே;
அதனால், என்னொடு பொரும்கொல், இவ் உலகம்?
உலகமொடு பொரும்கொல், என் அவலம் உறு நெஞ்சே?" (நற்றிணை- 348 )

என்ற பாடலில் நிலவானது நீல நிற வானத்தில், பால் போன்ற தன் கதிரைப் பரப்புவதால், பால் போல் தோன்றும் கடலில்முளைத்தெழுகிறது. ஊரானது தழைக்கும் ஓசையுடன் மகிழ்ந்து ஒன்றாகத் திரண்டு ஆரவாரம் மிக்க தெருவில் விழாக் கொண்டாடுகிறது. கானகத்தில் பூக்கும் மலர்கள் பொதிந்து கிடக்கும் இடமெல்லாம் வண்டுகள் தாம் விரும்பும் துணையோடு தேன் உண்டு ஒலிக்கின்றன. எங்கும் மகிழ்ச்சி ஆரவாரம். நானோ, என் அணிகலன்கள் கழன்று என் காதலர் என் அருகில் இல்லாததால் எனக்குத் தோன்றும் துன்பத்தைப் பிறருக்குக் காட்டிக்கொடுப்பதால் உண்டாகும் அவல நிலையோடு இருண்டு கிடக்கும் இரவிலும் கண் மூடாமல் கலங்கிக் கொண்டிருக்கிறேன். அதனால், இந்த உலகம் என்னோடு போரிடுகிறதா, அல்லது, துன்புறும் என் நெஞ்சம் இந்த உலகத்தோடு போரிட்டுக்கொண்டிருக்கிறதா, என்பது விளங்கவில்லை என்று தலைவி தன் தோழியிடம் கூறுகிறாள். தொலைவில் கேட்டுகொண்டிருக்கும் தலைவன் தலைவியை மணக்க வேண்டும் என்பது இந்த பாடலின் நோக்கமாக இருப்பதை அறியமுடிகிறது.

இதனோடு தொடர்புடைய வெண்மணிப் பூதிரியார் பாடல். தலைவி தன் புணர் குறி நிகழ்ந்த கால வெளிப் புள்ளியாக தொல் கடலின் அலைகள் கரையை மோதி இன்புற்று ஒலிக்கும் நெய்தல் வனத்தில், புன்னைகள் மலர்ந்து நிறைந்துள்ள புன்னை மர நிழலின் மணல் மேட்டைச் சுட்டுகிறாள். இங்கு புணர்ச்சியின் இன்பம் இந்த இயற்கையின் இயக்கங்களுடேயே குறிப்புணர்த்தப்படுகிறது. கடலின் தொன்மை காமத்தின் தொன்மையைக் குறித்து, காமம் இயற்கையின் ஆற்றலாகவே சுட்டிப் புன்னையின் மலர்ச்சியும் காமத்தின் நிறைவைக் குறிப்பதாகப் பாடல் செல்கிறது.

“..................... முதுநீர்ப்
புணரி திளைக்கும் புள்இமிழ் கானல்
இணர்வீழ் புன்னை - எக்கர் நிழல்” (குறுந்தொகை 299)

இவ்வாறு நெய்தல் பாடிய சங்கப் பெண் புலவர்கள் இயற்கை தம் வாழ்வியலோடு ஒன்றி இருக்கும் பாங்கை வெளிப்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

பெண் புலவர்களின் பாடல்களில் தலைவி எப்போதும் கைவிடப்பட்ட ஒரு நபராகவே இருக்கிறாள். தலைவன் பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் அவன் தொலைவில் இருப்பதாகவே சுட்டுகிறது.

தலைவி வீட்டோடு பிணைக்கப்பட்டுள்ளது போலப் பல பாடல்களில் தலைவனின் சித்திரம் தேரோடு பிணைக்கப்பட்டுள்ளது. தேர் இயங்கு நிலையின் குறியீடாக வருகிறது. பல பாடல்களில் தலைவியைப் பிரிந்து போர்க்களத்தில் செறுவில் இருக்கும் தலைவன், தொலைவில் மறைந்து கொண்டிருக்கும் தேரும், தேய்வுற்று மறையும் அதன் ஒலியும் திரும்ப திரும்ப வருமாறு பாடல் புனையப்பட்டுள்ளது.

**முடிவுரை**

அக இலக்கியங்களில் நெய்தல்திணையைக் குறித்துப் பாடிய பெண்பாற் புலவர்களின் பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய இலக்கியங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளன என்பதை அறியமுடிகிறது. இவர்கள் பாடிய 17நெய்தல் திணைப் பாடல்களில் 13 பாடல்கள் பிரிந்து சென்ற தலைவனின் வருகைக்காகத் தலைவியின் காத்திருப்பைக் கூறுவதாகவே காணப்படுகின்றன.

அவை தலைவியின் கூற்றாகவே வருவதை அறிந்துகொள்ளமுடிகிறது. நெய்தல் திணைப்பாடிய பெண்பாற் புலவர்களில் ஔவையார் மட்டுமே நற்றிணை, குறுந்தொகை ஆகிய இரண்டு நூல்களிலும் பாடியுள்ளார் என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.

நெய்தல் பாடல்களில் பெண் புலவர்கள் பெண்ணுடலுக்கும் இயற்கைக்குமான தொல் உறவைக் கவிதையின் இயங்கு தளமாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது. மேலும் அவர்கள் பார்வையில் நெய்தல் நிலக் காட்சிகள் தனித்துவமாகச் சொல்லப்படுகிறது. இன்று நவீன பெண் கவிதை இயக்கம் தற்காலத்திற்கான உத்வேகங்களைப் பெறுவதற்கான மூல வளங்களை நம் பண்டைத் தமிழ்ப் பெண்டிர் நெய்தல் பாடல்களில் சொல்லியுள்ளதை அறியமுடிகிறது.

ஆணின் கலாச்சாரப் புனைவுகளின் வழி வரலாற்றுக்குள் கட்டமைந்த பெண்ணுடலை, அதிலிருந்து விடுவித்து அதன் இயல்புகளை தொல் இச்சைகளின் வழி கொண்டாடுதலை மேற்காணும் பாடல்கள்வழி அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் உடல் சார்ந்த உணர்வுகளும் மனத்தடைகளும் ஆண் வழிப் புனைவுகளும் இன்றி இயல்பாக பாடல்கள் உள்ளதைப் பெண் புலவர்களின் பாடல்வழி தெரிந்துகொள்ளமுடிகிறது.

**துணை நூற் பட்டியல்**


கேசிகன், புலியூர்(உ. ஆ), சங்க இலக்கியம், தொகுதி- 2, சாரதா பதிப்பகம், சென்னை, 2012.

சாமிநாதையர், டாக்டர் உ. வே.(ப. ஆ), குறுந்தொகை, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1962

சுப்பிரமணியன், ச. வே.(உ. ஆ), சங்க இலக்கியம், தொகுதி- 3, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010

நாராயணசாமி ஐயர்(உ. வி), நற்றிணை, கழக வெளியீடு, சென்னை, 1962.

பொன்முடி சுடரொளி, முனைவர் ஆ. ஆ., தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் நெய்தல் நில வாழ்வியல்,
தமிழ்த்துறை, உ. நா. அரசினர் கல்லூரி, பொன்னேரி, 2014.

முருகேசபாண்டியன், ந, சங்கப்பெண் கவிஞர்களின் கவிதைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2010